*International Journal of Research Instinct*
*(Peer-reviewed Journal)*

*ISSN ONLINE 2348-2095*
**Research Article**

# நற்றிணையில் முல்லைத்திணைத் தலைவன் வெளிப்படுத்தும் அன்புணர்வு

வீ.மாரியாயி

விரிவுரையாளர், ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), thதிருச்சி.05

## அறிமுகம்

பண்டைத்தமிழ் இலக்கியங்களாக அமைபவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ்விலக்கியங்கள் அக்காலத் தமிழர்களின் பண்பாட்டையும் வாழ்க்கை முறைகளையும் தெளிவுற முன் வைக்கின்றன. மூன்று முதல் நூற்றுநாற்பது அடிகள் வரையிலான எட்டுத்தொகைப்பாடல்கள் சங்கத்தமிழர்களின் உணர்வு கூறுகளை விளக்குபவை நூற்று மூன்று முதல் எழுநூற்று எண்பத்திரண்டு அடிகள் வரையிலான பத்துப்பாட்டு நூல்கள் அக்கால மக்களின் வாழ்க்கைக் கூறுகளை விளக்குபவை,

## நற்றிணை

எட்டுத்தொகை நூல்களுள் “நல்ல” எனும் அடையைப் பெற்று வருவது நற்றிணையாகும் அகம் சார்ந்து அமைவது இந்நூல் அகம் எனப்படுவது தலைவன் தலைவியர்க்கிடையே நிகழும் அன்புணர்வின் வெளிப்பாடாகும், கைக்கினை முதலாகப் பெருந்திணை ஈறாக அகத்திணைகள் ஏழாகும், இவ்வேழு திணையுள் தலைவன் தலைவியர்க்கிடையிலான ஒத்த அன்பின் வெளிப்பாடாக அமைவன குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்தாம் இவை அன்பின் ஐந்திணை என வழங்கப் பெறுகின்றன.

## முல்லைத்திணை

ஓதல், தூது, பகை பொருளீட்டல் ஆகிய காரணங்களால் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் நெடுநாட்களின் பின்னர் தலைவியைக் காண்பதற்காக விரைந்து வருகின்றனர். அப்பொழுது தலைவியைப் பற்றிய முன் நிகழ்வுகள் அவன்நினைவில் தோன்றுகின்றன. தான் அவளோடு இணைந்து வாழந்த காலத்தில் எத்தகைய அன்போடு தன்னிடத்தில் நடந்து கொண்டாள் என்பதும் எத்தகைய அழுகுடையவள் தன் தலைவி என்பதும் அவன் எண்ணத்துக்குள் வந்து செல்கின்றன. இப்பொழுது அவள் என்ன செய்து கொண்டிருப்பாள் என்பதுமும் தன்னைக் பிரிந்திருப்பதால் எத்தகைய துன்பத்துக்குள்ளாகியிருப்பாள் என்பதும் அவன் நினைவுக்காட்சிக்குள் வந்து செல்கின்றன.

நீண்ட பெருவழியைக் கடந்து வரும்பொழுது அவன்காணும் காட்சிகள் அவன் அன்புணர்வைத் தூண்டுகின்றன. ஆனால் தலைவியை விரைவில் சென்று காணவேண்டுமென அவன் உணர்வு துடிக்கின்றது. இத்தகைய உணர்வுக் கூறுகளை முன்வைப்பதால் முல்லைத்திணைப்பாடல்கள் சிறப்புப் பெறுகின்றன. அவ்வகையில் முல்லைத்திணை சிறப்புடையதாகின்றது.

மனிதன் அன்றாட வாழ்விற்குப் பொருள் இன்றியமையாததாக இருக்கின்றது. அதனால் பொருள் தேடுவதற்கு மனிதன் ஊர்விட்டு, ஊரும், நாடுவிட்டு நாடும் சென்று இவற்றையெல்லாம் கடந்து பொருள் ஈட்டி வருகின்றான்.

“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு”

எனும் பழமொழி இதனை உணர்த்தும்,

மனைவி குழந்தை மற்றும் உறவினர்கள் இவர்களை விட்டுப்பிரிந்து சென்று கடல் தாண்டியும் பொருளின் அருமை அறிந்து பொருள் ஈட்டி வருவது நலம் பயக்கும், பொருள் இருந்தால் தான் இவ்வுலக மனிதர்கள் அவர்களை மதித்துப் போற்றுவார்கள் என்பதை வள்;வர்.

“அருளில்லார் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
கிவ்வுகலம் இல்லாங்கி ஆங்கு” 1 (246 குறள்) – ப - 51

என்று விளக்குகின்றார்.

பொருள் தேடிச் செல்லுவதற்குப் பிரிந்துச் செல்லுதல் பற்றி

“பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே” 2 (தொல், அகம், 979)

என்ற தொல்காப்பிய நூற்பா விளக்குகின்றது.

வினையே ஆடவர்குரியது என்றும் இவை நான்குவகை வருணத்தார்க்குரியது என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

தலைவன் பொருள் தேடுதவதற்காகத் தலைவியை விட்டுப் பிரிந்து செல்கிறான். தலைவன் பொருள்தேடும் பொழுதோ போர் நிகழும் பொழுதோ வேறு செயலில் தலைவன் ஈடுபட்டிருக்கும் பொழுதோ தலைவியின் நினைவு அவனுக்கு வரவில்லை. ஆனால் தலைவன் பொருள் தேடச்சென்ற இடத்திலோ, காட்டிலோ பறவைகள் மாலையில் தன் கூடு தேடி வரும் பொழுதும், விலங்குகள் தன் பிணையுடன் ஒன்றாக சேர்ந்து இருக்கும் பொழுதும், மழைக்காலத்தில் மேகங்கள் ஒன்று சேரும் பொழுதும் மாலையில் கோவலர்கள் ஆடு மாடுகளை வீட்டிற்கு ஒட்டிக்கொண்டு வரும்பொழுதும் மாலையில் பூக்கள் விரிந்து அவற்றின் மூலம் வரும் நறுமணமும் வாடகைக்காற்றும் வண்டுகளின் ஒலி எழுப்பும் தேன் உண்ணும் பொழுது அந்நிகழ்ச்சியைத் தலைவன் காண்கின்றான் அக்காட்சிகள் தலைவனுக்குத் தலைவியின் நினைவை ஏற்படுத்துகின்றன. அதனால் தலைவன் தேர்ப்பாகனிடம் குதிரையைத் தீண்டி மிக விரைவில் தேரைச் செலுத்துமாறு கூறுகிறான் முல்லைத்திணைத் தலைவன் வெளிப்படுத்தும் அன்புணர்வை இனிவரும் பக்கங்களில் விளக்கமாகக் காணலாம்.

கானக்கோழி உருக்கிய நெய்யில் பாலைச் சிதறினாற் போல, அழகிய நுண்ணிய பலவாகிய புள்ளிகளையும் கடைகின்ற குரலையுடைய மிடற்றினையும் கொண்டது அது

கண்டார்க்கு விருப்பம் தரும் தகுதியுடையது, அக்கோழி மழை பெய்து நீர் வடிந்த அகன்ற, நெடிய காட்டில் ஈரம் காயாத மணலை நன்றாகப் பறித்து நாட்காலையில் இரையாகிய நாங்கூழ்ப் புழுவைக் கவரும் அப்புழுவைக் கொன்று தன் பெடைக்கு ஊட்ட வேண்டிப் பெருமையோடு அப்பெடையை நோக்கும் நிலையை நீ அங்கே காண்பாயாக! என்று கூறியதை

"................................................................................ உதுக்காண்
உடுக்குறு நறுநெய் பால் விதிர்த்தன்ன
அரிக் குரல் மிடற்ற அம் நுண்பல் பொறிக்
காமரு தகைய கானவாரணம்
பெயல் நீர்போகிய வியல் நெடும் புறவில்
புலரா ஈர் மணல் மலிரக் கெண்டி
நாள் இரை கவர மாட்டி தன்
பேடை நோக்கிய பெருந்தரு நிலையே" 3 (ப – 36)

"பெருந்தகைக்கு உடைந்த நெஞ்சம் ஏமுறச் செல்க
தேரே: நல் வளம் பெறுக, (அகம் 31: 9-10)

"கானக்கோழி கவர்புறச் செய்யுள் ஒண்பொறி
எருத்தின் நன்சிதர், (குறுந் 242 : 1-2)

என்பதால் அறியலாம்.

தலைவி வாழும் ஊர்காட்டின் உள்ளமைந்த வன்புலத்தாலாகிய காடு சூழ்ந்த நாட்டின் கண்ணது, அங்கு உடும்பைக் கொன்றும், வரித்த தவளையை அகழ்ந்து எடுத்தும், நெடிய கோடுகளைக் கொண்ட புற்றுகளை வெட்டி ஆண்டுறையும் ஈசல்களை மண்ணைத்தோண்டி எடுத்தும் பகலில் முயலை வேட்டையாடியும் வாழும் வேட்டுவேன், தோழில் சுமந்து வந்த பல்வேறு வகைப்பட்ட பண்டங்களைப் பொதித்த ஏனைய கருவிகளையும் வீட்டிலே போட்டுவிட்டு மறந்து மிகுதியாகப் பருகிய கள்ளின் மயக்கத்தில் செருக்குற்று கிடப்பான் முல்லை மலரின் நுண்ணிய அரும்பு அக்காட்டிடத்தே உள்ள ஊரில் மலர்ந்திருக்கும், அத்தயை ஊரில் இருந்தாலும் அவள் உள்ளம் இதுவரை பொறுமையால் இருந்தது. இன்று நாம் செல்லாவிடின் அவள் உள்ளம் மிக வருந்தும் என்பதை

"அன்பு கலந்து
நம்வயின் புரிந்த கொள்கையொடு நெஞ்சத்து
உள்ளினள் உறைவோன் ஊரே" 4 (ப-105)

என்ற கபிலர் பாடல் மூலம் அறியலாம்.

பானனே! வலிமை நிறைந்த வாளினால் நம் அரசன் மிகுந்த பகையைத் தணித்துக் கொண்டான். வேந்துவினைவயிற் பிரிந்த நம் செயலும் முடிவுற்றது குதிரைகளைக் கத்தரித்து அழகு பெற்ற பிடரியில் கட்டப்பெற்ற மணிகள் ஒலிக்குமாறு தேரிலே பூட்டுக. பூண்டுகள் தாழ்ந்த மார்பில் பொருந்தியிருக்கும் அழகிய மலைகளின் முகட்டில் கண்ணீர் சிதறி விழும்படி அழுதவண்ணம் இருப்பவள் அழகிய மாமை நிறம் பொருந்திய நம் காதலி,

நம்மைக்கண்டவுடன் நமக்கு விருந்து செய்யும் விருப்பத்துடன் சமையலறையுள் புகுவள், உரிய விருந்தை வருந்தி ஆக்கி களைப்படைந்த நிலையில் மகிழ்ச்சி மிகுந்த முகத்தினாய் இனிய நகையைக் கொண்டு நாம் காண விளங்குவாள் அந்த நகைமுகம் நாம் காணும் பொருட்டுத் தேரை விரையச் செலுத்துக

"பூண் தாழ்
ஆக வன முலைக் கரைவலம் தெறிப்ப
அழுதனள் உறையும் அம்மா அரிவை
விருந்து அயர் விருப்பொடு வருந்தினள் அசைஇய" 5 (ப– 145)

"அவிழ் பூ முடியினள் கவைஇய மடமா
அரிவை மகிழ்ந்தயர் நிலையே" (நற்: 42 : 11-12)

பாக! பெருங்கடலில் வீசுகின்ற அலைகள்கொண்டு குவிக்கும் புலவு நாற்றம் கமழும் மணல்மேடு, அங்குப் புள்ளிகளையுடை நண்டினை பிடிக்கச் சென்று, அது இயலாது களைப்புற்று அம்முயற்சியைக் கைவிட்ட குமற்றமற்ற இளையோளகிய என் காதலியிடத்துத் தற்போது பிரிவினால் வருந்தியிருக்கும், நான் வினைவயிற் செல்கின்ற வருத்தத்தை உரைத்தேன், அவ்வளவில் மறுமொழி கூற இயலாது ஆற்றாதவளாய் ஏறியமலர் அழகுடன் தாழ்ந்து விளங்கும் ஞாழல் மரத்தின் பூங்கொத்தின் இதழ்களைப் பிய்த்துப் பிசைந்தவனாய் உதிர்த்தன்ன அங்ஙனம் அறிவு மயக்கமுற்றவனின் அழகிய மடத்தினையுடைய நிலையை நீ அறிந்தனையோ? அறியாயோ? என்று கூறினான் என்பதை தொண்டைமான் இளந்திரயன் பாடலில் காணலாம்

"ஆடு வரி அலவன் ஓடுவயின் ஆற்றாது
அசைஇ உள் ஒழிந்த வசை தீர் குறுமகட்கு
உயவினென் சென்று யான் உள்நோய் உரைப்ப" 6 (ப-191)

"அலவனை அலைத்தல் குறுமகளிர் விளையாட்டாகும் முள்ளி வேரளைக் கள்வனாட்டி" (ஐங்-மருத:23)

என்பது காண்க,

அழகுடன் விரிந்த தலையாட்டத்துடன் விரைந்து செல்கின்ற இயல்புடைய மனச்செருக்கு மிகுந்த வளமான குதிரைகள் பூண்ட தேர், அத்தேர் எழுந்து தண்ணிய மழை பெய்தலாலேபெருகிய கான்யாற்றின் உயர்ந்த மணற்பாங்கான கரை பின்னேகும்படி விரைந்து செல்லக்கருதினை, மேலும் நின்புதிய வரவை விருப்பத்துடன் ஏற்கும் நின்காதலியின் மென்மையாக உயர்ந்து பருத்த தோளில் துயிலுவதை விரும்பினை, நின்மலை வாழ்வதாக! நம் அரசன் போரை முடித்து நேற்றிரவுதான் செல்லும்படி விடுத்தனன் எனக்கூறி வருந்தற்க: விதை விதைக்கும் ஆயர் பலமுறை உழுது பண்பட்ட பழங்கொல்லைக் புழுதியில்நிறைவுற வரகினை விதைத்தனர். அவை முளைத்துப் பசிய இலை நிரம்பிய கவைத்த கதிர்களாய் இருக்கக் கண்டு கண்டார்க்கு மகிழ்ச்சியைச் செய்யும் அழகிய பெண்மான் தின்று மகிழ்ந்தது.

இத்தயை பெண்மான் மரல் வித்துக்கள் உதிர்ந்த அழகிய காட்டில் தன்னுடைய கலையாகிய ஆண்மானுடன் மகிழ்ந்து விளையாடும் முல்லைநிலைப் பகுதியில் நின் காதலியின் ஊர் அமைந்துள்ளது அன்றோ? ஆதலின் விரையச் சென்று உடன் காணுமாறு தேரைச் செலுத்துவேன்

தொல்காப்பியம் “இடைச்சுர மருங்கில தவிர்தல் இல்லை”, என்பதற்கேற்ப (தொல். பொருள் 194)

“காமர் மடப்பினை
அரலை அம்காட்டு இரலையொடு வதியும்
புறவிற்று அம்ம, நீ நலந்தோள் ஊரே
“எல்விருந்து அயரும் மனைவி
மெல் இறைப்பணைத்தோள் துயில் அமர்வோயே” 7 (ப.220)

என்கிற ஓருசிறை பெரியனார் பாடலில் அறியலாம்.

“புரிந்த காதலொடு பெருந்தேர் யானும், ஏறிய அறிந்தனீ நல்லது வந்தவாறு நனியறிந்து தன்றோ இவனே” (அகம் 384: 2-4)

இரவு நேரத்தே விருந்து வரினும் உவப்பவள் என்தலைவி!, அவள் என் சொற்கேட்டு இவ்விருந்து நல்லறம் செய்யும் கற்பினையும் மென்மையான இயல்பையும் இளமையையும் உடையவள் ஆவாள், அத்தயை காதலி தங்கியிப்பதும் பொய்யாத வருவாயுடையதுமான ஊர் காட்டகத்தே அமைந்தது.

மழை காலிறங்கிப் பொழிகிற மழைக்காலத்து இறுதிநாளில் பால்விளைகூறும் இடையன் கையிற் பலவாகிய காலிட்டுப் பின்னிய உறியுடன், தீக்கடைக்கோல் முதலான கருவி பலவற்றை இட்ட தோற்பையினையும் ஒரு சேரச் சுருக்கிக் காட்டினான், அவற்றைப் பனை ஓலைப் பாயொடு சேர்த்துக்கட்டி முதுகில் சுமந்து சென்றான். அங்ஙனம் செல்கையில் நுண்ணிய பல நீர்த்திவலைகள் அவனுடைய உடம்பின் ஒரு பகுதியை நனைத்தன. கையிலிருந்த கோலையூன்றி அதனிடம் ஒருகாலை ஊன்றியவனாய் ஒடுங்கி நின்ற அவ்விடையன் நாவை மடித்தபடி “விளை” யொலியை எழுப்பினான், அவ்வொலி கேட்ட ஆட்டுக்கூட்டம் வேற்றிடங்களில் திரியாது மயங்கி அவ்வண்ணமே தங்கி நிற்கும் காட்டுப் பகுதியிலே அமைந்துள்ளது தலைவியின் ஊர் உள்ளது என்பதை இடைகாடனார் பாடல் உணர்த்துகின்றது.

“பொய்யா யாணர்
அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்,

மெல் இயற் குறுமகள் உறைவின், ஊரே" 8 (ப.266)

ஆநிரை மேய்ப்பவர் உறிக்கா சுமந்த தோளினர் என்பதும், ஞெலிகோற் கொண்டு நெருப்புக் கொள்பவர் என்பதும் பெரும்பாண் (170:78)
அடிகளாற் பெறப்படும்.

"நாவை மடித்து ஒலியெழுப்புதலை மடிவிடுவீளை" (குறிஞ், 161)

நெஞ்சமே பரற்கள் மிகுதியாக உள்ள பாலைநிலத்தில், வளர்ந்தோங்கிய சிச்சிலிப் பறவை போன்ற தலையை உடைய கள்ளியின் மேலே படர்ந்து தழைத்த முல்லையின் நறுமனம் மலரை கமழும், ஆடுகின்ற தலையை உடைய ஆட்டின் கூட்டத்தை மேய்க்கும் வலிய கையையுடைய இடையன் இரவிலே கொய்து வெண்மையான பனங்குருத்தின் போழுடனே சேர்த்து மாலையாகத் தொடுத்து அணிவான். அந்த மாலையின் நறிய மணம் தெருவில் எங்கும் கமழும் அவ்வாறு மணம் கமழும் இன்றைய மாலையம் பொழுதில் சிறுகுடிகளையுடைய கடற்கரைக்கண் உள்ள எமது வளமனையில் நெடிய சுவரின் கண், பல்லி, வினைவயிற் பிரிந்து நாம் செல்லும்போது என்று வருவீர்கள் என்று தலைவி கேட்டதற்கு நல்ல நெற்றியுடையய், நான் கருதிய வினையை முடிந்தவுடன் வருவேன், என்று கூறிச் சென்று இன்று அவள் துன்பம் தீர நாம் வருகின்ற வருகையை அறிகுறியாக முன்னரே ஒலி செய்து தெரிவிக்குமோ?

"முன்னியது முடித்தனம் ஆயின், நன்னுதல்!
வருவம், என்னும் பருவரல் தீர,
படுங்கொல், வாழி, நெடுஞ்சுவர்ப் பல்லி
பரந்தலை போகிய சிரற் தலைக்கள்ளி
மீமிசைக் கவித்த வீநறு முல்லை" 9 (ப.310)

பல்லி ஒலிப்பதனை நிமித்தம் கூறுவதாகக் கருதுவதனைப்,

"பல்லியும் பாங்கொத்து இசைத்தன, (கலி, 11.21)

பாடலடியும் உணர்த்துகின்றது.

"பாகனே! நம் காதலி, வரும் விருந்தினரை எதிர் கொண்டு போற்றும் விருப்பம் மிகுந்தவளும் பெரிய தோளுடைய இளமகளும்மாவாள். அவள் மின்னல் போல ஒளிவிட்டு திகழ்கின்ற அணிகளை அணிந்தவளாய் நம் நல்ல மாளிகை பொலிவு பெற விளங்குவள். அத்தகைய இளையோர், நடந்தலையறியாத சிறிய பாதங்களையும் பூப்போன்ற கண்களையுமுடைய புதல்வன் தூங்குமிடத்திற்குத் துவளும் நடையினாளாய் விடியற்பொழுதில் சென்று எந்தாய் வருக" என அழைப்பான் அத்தகை அழகிய இனிய குரலை நாமும் கேட்க வேண்டும்

புறவின் கண் பல்வேறு மலர்கள் பூத்தமையைக் கூறியதன் மூலம்தான் வருவதாகக் குறித்த! கார்ப்பருவம் வந்தது. அதனைக் காணும் தோறும் தலைவியின் ஆற்றாமைமிகும். அதனால் தேரை விரையச் செலுத்தும் குறிப்பை உட்கொண்டு புதல்வனை எழுப்பும் குரல் கேட்குமாறு தேர் செல்க என்றான்.

"நின் செய்வினை நெடுந்தோ்
விருந்து விருப்புறுஉம் பெருந்தோட்குறுமகள்
மின் ஒளிர் அவிர் இழை நல் நகர் விளங்க,
நடை நாட் செய்த நவிலாச் சீறழுப்
பூங்கட் செய்த ரவிலாச் சீறடிப்
பூங்கட் புதல்வன் உறங்குவயின் ஒல்கி
'வந்தீக, எந்தை! என்னும்
அம் தீம் கிளவி கேட்கம் நாமே' 10 (ப.407)
"தலைவியும் தோழியும், பருவத்து வரக்கண்ட தலைவனை
எந்தை எனல், (அகம் 104:14)

"பாகனே! பழுத்து இலைகளை உதிர்த்த பிடவமெல்லாம் மெல்லிய மலர்கள் விளங்குமாறு அரும்பு விட்டன, புதர்மேல் பற்றிப் படரும் முல்லைக்கொடிகள் யாவும் மலர்ந்தன. பொன் எனும்படியான அழகிய நிறமமைந்த மலர்களைக் கொன்றையும் மலரச் செய்தது, நீலமணி எனும்படியான பலமலர்கள் காயாவின் குறுகிய கிளைகள் தோறும் நெருங்கி அழகு செய்தன, இவ்வாறு மலர்கள் பலமலருமாறு இன்று காலை கார்ப்பருவம் தொடங்கியது. மடப்பத்தை உடைய பிணைமான் நீங்கிப் பெயரும் களர்நிலத்தில் மருண்டு விழிக்கும் கண்களையுடைய தன் குட்டியொடு தன் கூட்டத்தினின்று தவறி விலகி ஓடும், அதனை நீங்காத விருப்பமுடைய நெஞ்சத்துடன் சென்று தேடும் ஆண்மானை உவ்விடத்தில் காண்க, எனவே நீயும் மிக விரைந்து நின்தேர் செல்லுமாறு செலுத்துக.

"....................உவக்காண்
கழிப்பெயர் களரில் போகிய மடமான்
வழிக்கட் பேதையொடு இனன் இரிந்து ஓட
காமர் நெஞ்சமொடு அகலா,
தேடுஉ நின்ற இரலை ஏறே" 11 (ப.445)

சிவந்த நிலத்தையுடைய காட்டிடத்தில் புல்லிய மயிரைக்கொண்ட தெளிந்த மணிகள் கட்டப்பெற்ற ஆடுகளின் கூட்டம் தாம் மேய்வதை விட்டு இடம்பெயர்ந்து தொழுவத்தைச் சேரும், காட்டிடத்தே உள்ள முல்லையின் விரிந்த வாயையுடைய 'மலரை மலைச்சாரலின் புறத்தே உள்ள பார்ப்பன மகளிர் புறித்துச் சூடுவர், சூரியனும் தான் மறைகின்ற மேற்கு மலையைச் சாரும், இத்தகைய ஒளியற்ற அணிகலன்களை அணிந்த என் காதலி வருந்துவாளோ! வருந்துவாள்தான், எனவே பாகனே! தேரை விரைந்து செலுத்துவாயாக,

அழகிய குருந்தம் பூக்கள் மலர்கின்ற காட்டிடத்தே ஆரவரமிக்க தம்மூக்குரிய மரங்கள் கண்ணிலே தோன்றும், என்பதை

"செந்நிப் புறவின் புன்மயிர்ப் புருவை
பாடு இன்தெள் மணித்தொடு தலைப்பெயர,
கான முல்லைக் கயவாய் அலரி
பார்ப்பன மகளிர் சாரற் புறத்து அணிய", 12 (ப.592)

'வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும் குரூஉமயிர்ப்
புருவை ஆசையின் அல்கும்". (ஐங்,23:1-2)

பாகனே காயாமரங்கள் நிறைய மலர்ந்துள்ள மலையிடத்தே இடையிடைச் சரக்கொன்றைகள் மலர்ந்தது போல மலையின் பிளவுகள் எல்லாம் ஒளியில் புலப்படுமாறு மின்னி நம் தலைவியாகிய மாமை நிறமுடையாள் இருந்த திசை நோக்கிச் சென்று அகன்ற கரிய வானம் எல்லாம் மறையுமாறு பரந்து மழை பெய்யத் தொடங்கிவிட்டன இதுகாறும் மழை பெய்யாதிருந்த மேகங்கள், அவ்வாறு மழை தொடங்கியமையின் ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை பூண்ட நம் தலைவி நிழல் விடுகின்ற ஒளியையுடைய கைவளையல்கள் கழலுமாறு வருந்தி அழத் தொடங்கினள். அதற்கு எதிராக முழங்குகின்ற இடியொலிக்கும் இரவுப்பொழுதில் கோவலர் தம் புல்லாங்குழலை இசைக்கத் தொங்கினார். ஆதலின் தேரை விரைந்து செலுத்துக,

"மாயோள் இருந்த தேஎம் நோக்கி,
வியல் இரு விசும்பு அகம் புதையப் பாஅய்
பெயல் தொடங்கினவே, பெய்யாவானம்
நிழல் திகழ் சுடர்த்தொடி ஞெகிழ ஏங்கி
அழல் தொடங்கினனே." 13 (ப.684)

என்கிற ஔவையார் பாடலில் காணலாம்.

பரற்கற்கள் மிகவும் அமைந்த செல்லுவதற்கு அமையாத வழியில், உப்பு வாணிர்கள் நிறைந்திருக்கும் சிறிய குடியிருப்புகள், ஓங்கித் தோன்றும் களர் நிலம், அக்களர் நிலத்தில் விளைந்த புளியின் கனியை உண்டு அதனால் காய்கின்ற பசி நீங்கிய நிலையில், தொடர்ந்து செலவு மேற்கொள்ளும், தலைக்கு மேலே பிடித்த ஓங்கிய குடையைக் கொண்ட வழியிடைக் கண்ட புதியவர்களே! தலைவியை இதுவரை நான் பிரிந்திருந்தேன். அதனால் விரும்பந்தக்க கரிய மணிபோலும் அலங்கரிக்கப் பெற்ற நெடிய கூந்தலைவும், திருந்திய அணிகலன்களையும் இனிய மொழியையும் உடைய அவள் இது வரை பிரிந்திருந்தமையின் கண்ணிலிருந்து வடியும் நீர் மார்பை நனைக்க வருந்தியிருந்தாள், இப்போது நாம் புதியேமாய் வருதலின் எமக்கு விருந்து செய்யும் விருப்பம் கொண்டு உணவு சமைக்கும் செயலில் வருந்துவள் ஆயினள், தேன்போலும் மொழியையுடைய தலைவியின் இப்புதிய நிலையை யாம் இப்போதே பெற்றோம்.

"................................. பிற்றை

வீழ்மா மணிய புனை நெடுங் கூந்தல்

நீர்வார் புள்ளி ஆகம் நனைப்ப

நீர்வார் புள்ளி ஆகம் நனைப்ப

விருந்து அயர் விருப்பினள் வருந்தும்

திருந்துகுழை அரிவைத்தே மொழி நிலையே."14 (ப.690)

வன்பரனர் இப்பாடல் மூலும் கூறுகின்றார்.

பாகனே! நீரின்மையாவே கோடையில் பல நாளாக வறப்புற்ற உலகத்து உயிர்கள் மகிழ்ச்சியோடு தத்தம் தொழிலை மேவுமாறு தொன்று தொட்டுப் பெய்கின்ற வழக்கத்தைப் போல மழை பெய்தது அதனால் புதிய நீர் நிரம்பிய பள்ளங்கள் தோன்றும் நாவினால் ஒலி செய்யும் கூட்டத்தையுண்டய தவளைகள் ஒலி செய்வதால் நாம் சென்ற தேரிற் கட்டிய நாவினையுடைய மணிகளின் ஒலியை ஒளி பொருந்திய நெற்றியையுடைய நம் தலைவி கேட்கவில்லை. ஆகவே நீவிர் முன்னர் சென்று என் வரவு கூறுமின் சென்று கூறக்கேட்ட ஏவலர் விரைந்து நமது இல்லம் புகுந்து அறிவித்தனர், உடனே அதுவரையில் மெல்ல நீரட்டாத கூந்தலை மாசு நீங்கும் படியாகக் கழுவிச் சிலவாகிய மலரைக் கொண்டு பலவாகிய கூந்தலலே முடிந்தாள், அத்தறுவாயில் யான் உள்ளே புகுந்தேன், என்னை நோக்கித் தன் மெய் வருந்தும் படி வந்து தன் குழல் அவிழ்ந்து குலைய என்னை அணைத்துக் மகிழ்ந்து எம் அரிவை மகிழ்ந்:து எம வரவைக் கொண்டாடிய தன்மை எம்மால் மறத்தற்கரியது.

"இல் புக்கு அறியுநராக மெய்லென

மண்ணாக் கூந்தல் மாசு அறக் கழீஇ

சில் போது கொண்டு பல்குரல் அழுத்திய

அந்நிலை புகுதலின் மெய் வருந்துறா அ

அவிழ் பூ முடியினள் கலை இய

மட மா அரிவை மகிழ்ந்து அயர் நிலையே." 15 (ப.73)

இப்பாடல் கீரத்தனார் விளக்குகிறார்.

தலைவன் வருகையை முன்னரே அறிவுறுத்தல் உண்டு என்பதை "யார் வாய்க் கேட்டனை காதலர் வரவே' (குறுந். 75:5) என்பதாலும் அறியலாம்.

மரங்கள் நெருங்கிப் பரந்த இடமகன்ற காட்டிலே வாடிய ஞெமையின் மீது பேராந்தை இருக்கும். அது பொற்கொல்லன் செய்யும் தொழிலிடத்து எழும் ஒலிபோல இனியவாய் ஒலிக்கும். இத்தகைய ஆந்தையினை உடையதும் வலிய பரங்கற்களுடையதுமான மேட்டு நிலம், இப்பகுதியில் பூட்டிய மணிகள் ஆரவாரிக்க அணிகள் பொருந்திய நெடிய தேரினைச் செலுத்தினான், இப்போது வழியிடையில் மேகம் மழைத் துளியைச் சிதறியதால் கார்ப்பருவம் வந்தது எனக் கொண்டான் அதனால் அவன் தன் மார்பில் குறிய புள்ளிகள் கொண்டதாய்ப்

பூசிய சந்தனத்தை விடக் குளிர்ச்சி பொருந்திய உள்ளத்தானாய் வந்தனன், இதற்கு வருந்துவேனோ? வருந்துவேன் அல்லேன்.

பனிக்கரு நாளே
இடைச்சுரத்து எழிலி உறைத்தென மார்பின்
குறும் பொறிக் கொண்ட சாந்தமொடு
நறுந் தண்ணியின் கொல் நோகோ யானே." 16 (ப.675)

இதன்மூலம் ஔவையார் குறிப்பிடுகின்றார்.

குடிஞையின் குரல் ஒலியைக் குறித்து 'விரலூன்றி படுகண் ஆகுளி கடுப்பக் குடிஞை இரட்டும் நெடுமலை, (மலைபடு. 140.41) என மலைபடுகடாம் குறிக்கும்.

"கடுந்துடி, புலிதுஞ்சு நெடுவரைக் குடிஞையோடு இரட்டுமலை"

(புறம் 170:6-8)

தலைவன் சந்தனம் பூசி வருதலை "மலைச் செஞ்சாந்தின் ஆரமார்பினள்"

(குறுந். 321:1)

நாடன் ஆரமார்பின் அரிஞிமிறார்ப்பத் தாரன் கண்ணியன்".

(அகம். 102:9-13)

என்றவாறும் காணலாம்.

**தொகுப்புரை**

வினையின் காரணமாகப் பிரிந்து செல்ல வேண்டிய சூழ்நிலையில் உள்ளவன் தலைவன். தலைவியின் மீது மாறா விருப்புடையவானயினும் 'வினையே ஆடவர்க்குயிரே' எனும் நிலையிலும் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' அவசியம் என்ற நிலையிலும் தலைவியைப் பிரிந்து செல்கின்றான்.

வினையாற்றும் காலத்தில் தலைவியை மறந்து ஆண்மையுடன் செயலாற்றும் தலைவன் வினை முடிந்ததும் தலைவி மீது அடங்கா விருப்பமுடையவனாகின்றான், அதனால் அவன் ஏறி வரும் தேர் ஓடாத தேராக அவனுக்குத் தோன்றுகின்றது. வழியிலே காணப்பெறும் உயிரிணங்களின் செயல்கள் தலைவி மீதான அன்பைத் தூண்டுமாறு அமைந்து விடுகின்றன.

வினையாற்றும் காலத்தில் தலைவியை மறந்து செயலாற்றும் தலைவன் வினைமுடித்து மீளும்பொழுது, கானக்கோழியானது நங்கூழ்ப் புழுவைக் கவர்ந்து பெடைக்கு ஊட்டுகின்றது. இந்தக் காட்சியை பார்த்ததும் தலைவியின் நினைவு அவனுக்கு ஏற்படுகின்றது. அதனால் தலைவன் தன் அன்புணர்வைத் தலைவியிடம் சென்று தெரிவிக்கும் ஆவலில் தேரை விரைந்து செலுத்துமாறு கூறுகின்றான்.

முல்லை மலர் மழையின் காரணமாக மலர்ந்து விரிந்து மணம் வீசுகின்றது. அந்த வாடைக்காற்று, தலைவியை வருத்தும் என்ற நினைவு தலைவலின் மனதில் எழுந்தவுடன் தலைவியின் நினைவு தோன்றுகின்றது, தலைவியானவள் தான் வருவதாகக் கூறிச் சென்ற

நாள் வந்து விட்டது என அறிந்து தலைவனின் வருகைக்காக எதிர்பார்த்து வந்தவுடன் விருந்து படைத்துத் தலைவனையும் உறவினர்களையும் இன்முகத்துடன் வரவேற்றுத் தலைவனின் அன்பைப் பெறுவாள் என்று தலைவன் என்னி மகிழ்கின்றான்.

தலைவன் தலைவியிடம் குறித்த காலத்தில் வந்து விடுவேன் என்று கூறுகிறான், ஆனால் தலைவி அதற்கு மறுமொழி கூற இயலாது ஆற்றாதவளாய் ஞாழல் மரத்தின் இதழ்களை பிய்த்து பிசைந்து உதிர்க்கின்றாள். இதனை வினைமுடிந்து மீளும் தலைவன் எண்ணி உருகுகின்றான்.

தன்னுடைய வரவை எதிர்பார்த்து காத்திருக்கும் தலைவிக்குத் தான் வருவதை முன்னரே ஒலி செய்து உரைத்துத் தெரிவிக்குமாறு பாகனிடம் கூறித் தலைவன் தன் அன்புணர்வை வெளிப்படுத்துகின்றான்.

விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உணவு படைக்கும் இனியவளின் இனிமையான குரலை நாமும் கேட்கவேண்டும் என்ற ஆவல் தலைவனுக்கு ஏற்படுகின்றது.

கார்ப்பருவம் வந்தது தெரிந்து பிணைமான் தன் குட்டியொடு தன் கூட்டத்திலிருந்து தவறி விலகி ஓடும் அதனைப் பிரிய மனமில்லாத நெஞ்சத்துடன் சென்று ஆன்மான் தேடும், இவற்றைத் தலைவன் பார்க்கிறான். தலைவனுக்குத் தன் தலைவியின் நினைப்பு வருகின்றது. உடனே நாமும் தலைவியிடம் சென்று தன் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்று கருதுகின்றான்.

ஆடுகளின் கூட்டம் மேய்வதை விட்டுவிட்டு இடம் பெயர்ந்து தொழுவத்தை சேர்ந்தது. மாலையில் முல்லைப் பூ மலர்ந்தது. அதைப் பெண்கள் பறித்துத் தலையில் சூடுவர். சூரியன் மறைந்து தலைவியை வருத்தும், ஆகையால் நாம் விரைந்து சென்று தலைவியின் வருத்தத்தை நீக்குவோம் என்கின்றான்.

மேற்கண்ட நிலைகளில் தலைவனின் அன்பு வெளிப்படுத்தப் படுகின்றது. தலைவனின் எண்ணங்களின் வழியே தலைவன் மீது தலைவி கொண்ட காதலும் மாண்பும் உணர்த்தப்படுகின்றது.